# உழைக்கும் மற்றும் வளரிளம் பருவத்தினரின் கோரிக்கை மனு

## அரசின் கவனம் கோருதல் மற்றும் குழந்தை உரிமைநேய பதிலை எதிர்பார்த்தல்

### ஏப்ரல் – 30 – 2021 தேசிய உழைக்கும் குழந்தைகள் தினம், இந்தியா



**உழைக்கும் மற்றும் வளரிளம் பருவத்தினரின் கோரிக்கை மனு**
**அரசின் கவனம் கோருதல் மற்றும் குழந்தை உரிமைநேய பதிலை எதிர்பார்த்தல்**
ஏப்ரல்-30-2021 தேசிய உழைக்கும் குழந்தைகள் தினம், இந்தியா.

**உழைக்கும் குழந்தைகள் சங்கங்கள் / அமைப்புகளைச் சேர்ந்த நாங்கள், எல்லா சட்டங்களும், கொள்கைகளும், வழிகாட்டுதல்களும் மற்றும் திட்டங்களும் உழைக்கும் குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினரின் மிகச்சிறந்த நலனை உறுதி செய்வதுடன் எங்களது கடினமான மற்றும் பரந்துபட்ட நிலையினை குறித்து உணர்வுடனும் அக்கரையுடனும் இருக்க வேண்டுமென்று கோருகின்றோம்.**

**அறிமுகம்:**

கடந்தாண்டு ஐ.நாவின் குழந்தைகள் உரிமைகள் மீதான உடன்படிக்கையில் 30 ஆண்டு நிறைவினை ஒட்டி நடைபெற்ற தேசிய நிகழ்வில் எட்டு மாநிலங்களை சேர்ந்த உழைக்கும் குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினராகிய நாங்கள் ஒன்றுகூடி எங்களது உரிமைகள் குறித்து கலந்துரையாடினோம். மேலும் எங்களது கோரிக்கைகளை முன்னிருந்தவும், எங்களது ஆசைகளையும் கனவுகளையும் வெளிப்படுத்தவும் முற்பட்டோம்.

**‘குழந்தைகள்: மாற்றத்தின் தூதுவர்கள்’** என்ற அந்த நிகழ்வில் புதுதில்லி, மத்தியபிரதேசம், ராஜஸ்தான், குஜராத், மேற்குவங்காளம், தமிழ்நாடு, மஹாராஸ்ட்ரா மற்றும் கர்நாடகா ஆகிய 8 மாநிலங்களை சேர்ந்த உழைக்கும் குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினரின் சங்கங்கள் மற்றும் அமைப்புகளை சேர்ந்த நாங்கள் கலந்து கொண்டோம். நாங்கள் எங்களது தற்போதைய சூழல் குறித்தும் குறிப்பாக கோவிட்-19 நோய் தொற்று மற்றும் அதற்கு பின்னால் உள்ள நிலை குறித்த பகிர்ந்து கொண்டோம். உழைக்கும் குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினரின் பிரச்சனைகள் ஒருபோதும் போதிய கவனம் பெற்றதில்லை என்ற கருத்தை உரக்கச்சொன்னோம். மேலும் எங்களையும் நாங்கள் வாழும் சமூகத்தையும் அதிகமாக பாதித்து வரும் நீண்டகால கட்டமைப்பு சார்ந்த பிரச்சனைகளை கோவிட்-19 இன்னும் மோசமாகியுள்ளது.

இதனை தொடர்ந்து கடந்த சில மாதங்களாக எங்களது சங்கங்கள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகளாக இந்த பிரச்சனைகள் குறித்து தொடர்ந்து ஆழமாக விவாதித்து வந்தோம். அதன் அடிப்படையிலேயே இந்த கோரிக்கை மனுவினை நாங்கள் உருவாக்கியுள்ளோம். இதன்மூலம் எங்கள் உரிமைகளையும் எங்களுக்கு கிடைக்க வேண்டியது குறித்தும் நாங்கள் அழுத்தமாக பதிவு செய்கின்றோம். இந்த கோரிக்கை மனுவினை உழைக்கும் குழந்தைகள் தினமாகிய ஏப்ரல் 30, 2021 அன்று தேசிய அளவில் பகிர்ந்து கொள்கிறோம். இந்தநாள் எங்களது உரிமைகளை உயர்த்தி பிடிக்கின்ற நாள். எங்களது உரிமைகளை நாங்கள் பெறுவதை உறுதி செய்கின்ற முதன்மை கடமையாளர் என்ற முறையில் அரசிற்கு இந்த கோரிக்கை மனுவை அளிக்கின்றோம்.

**உழைக்கும் மற்றும் வளரிளம் பருவத்தினரின் கோரிக்கை மனு**
**அரசின் கவனம் கோருதல் மற்றும் குழந்தை உரிமைநேய பதிலை எதிர்பார்த்தல்**
ஏப்ரல்-30-2021 தேசிய உழைக்கும் குழந்தைகள் தினம், இந்தியா.

**கோரிக்கைமனு:**

உழைக்கும் குழந்தைகள் சங்கங்கள் / அமைப்புகளைச் சேர்ந்த நாங்கள், எல்லா சட்டங்களும், கொள்கைகளும், வழிகாட்டுதல்களும் மற்றும் திட்டங்களும் உழைக்கும் குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினரின் மிகச்சிறந்த நலனை உறுதி செய்வதுடன் எங்களது கடினமான மற்றும் பரந்துபட்ட நிலையினை குறித்து உணர்வுடனும் அக்கரையுடனும் இருக்க வேண்டும் என்று கூறுகிறோம். எங்கள் வாழ்வை பாதிக்க கூடிய எல்லாவற்றிலும் எங்களது கருத்துக்கள் கேட்கப்பட வேண்டும். எல்லா குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினரை போலவே, நாங்களும் இந்நாட்டின் இன்றைய இளையக்குடி மக்களே.

**அரசு பின்வரும் எங்களது பரிந்துரைகளுக்கு உரிய கவனம் அளிப்பதுடன் அதன்மீது அக்கரையுடன் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள கோருகிறோம்.**

**கோவிட்-19 பெருந்தொற்று சூழல் ஏற்படுத்தியுள்ள நெருக்கடியினை எதிர்கொள்ளுதல்**

- குழந்தைகளாகிய நாங்கள் மருத்துவமனைக்கு செல்ல மிகவும் அஞ்சுகிறோம். நாங்கள் சிறிய வீடுகளில் அதிக எண்ணிக்கையிலான குடும்ப உறுப்பினருடன் நெருக்கடியான சூழலில் வாழ்ந்து வரும் போது பாதுகாப்பான சமூக இடைவெளி சிறிதும் சாத்தியமில்லை. அது போலவே நாங்கள் மருத்துவமனை செல்லும் நிலை ஏற்பட்டால் யார் எங்கள் குடும்பத்தை பார்ப்பது? எங்களுக்கு உடனடியாக அரசின் ஆதரவு தேவை.
- நாங்கள் வாழும் ஒரு நகரத்தில் பெருந்தொற்று இரண்டாவது அலையினால் மூன்றாவது ஊரடங்கில் உள்ளோம். பெற்றோரோ குழந்தைகளோ யாரும் வேளைக்கு சென்று சம்மதிக்க முடியவில்லை எங்களுக்கு உடனடியாக இலவச உணவு பொருட்களும் சமைத்த உணவு பொட்டலங்களும் வழங்கப்பட வேண்டும். பெருந்தொற்றின் முதல் அலையின் போது கொடுக்கப்பட்ட நிதி உதவி போதுமானதாக இல்லாததோடு எல்லோருக்கும் கிடைக்காத நிலை ஏற்பட்டது. தற்போது போதிய நிதி உதவி வழங்குவதுடன் நாங்கள் வாழும் பகுதியின் உணவு பழக்கத்திற்கு பொருத்தமான உணவு பொருட்கள் வழங்கப்பட வேண்டும். ஊரடங்கில் நாங்கள் வெளியே வர முடியாத நிலை உள்ளதால் இந்த உதவிகள் அனைத்தும் எங்கள் வீட்டிற்கே அனுப்பப்பட வேண்டும்.
- நோய் தடுப்பூசி (2முறை) அனைத்து குடிமக்களும் இலவசமாக வழங்கப்பட வேண்டும். போலியோ தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டது போலவே கோவிட்-19 தடுப்பு மருந்துக்களும் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு நபருக்கும் இலவசமாக வழங்கப்பட வேண்டும். இது எங்களையும் எங்கள் குடும்ப உறுப்பினர்களையும் எங்கள் சமூக உறுப்பினர்களையும் பாதுகாக்கும்.
- 18 வயத்திற்கு கீழ் உள்ள எங்களுக்கு மருத்துவ பெட்டகங்களை அரசு வழங்க வேண்டும். இப்பெட்டகங்கத்தில் பழங்கள், விட்டமின்கள் இரும்புசத்து மற்றும் பிற சத்துமாத்திரைகள், ஆயுர்வேதா/இயற்கை மருந்துகள் மற்றும் கோவிட்-19 நோய் தொற்றை தடுப்பதற்கும், நோய் தொற்றை எதிர்கொள்வதற்கான ஆலோசனைகளும் இருக்க வேண்டும்.

**உழைக்கும் மற்றும் வளரிளம் பருவத்தினரின் கோரிக்கை மனு**
**அரசின் கவனம் கோருதல் மற்றும் குழந்தை உரிமைநேய பதிலை எதிர்பார்த்தல்**
ஏப்ரல்-30-2021 தேசிய உழைக்கும் குழந்தைகள் தினம், இந்தியா.

- முககவசம் அணியாத குழந்தைகளையும், இளையோரையும் காவல்துறையினர் துன்புறுத்தாமல் அவர்களுக்கு முககவசத்தை வழங்க வேண்டும். எங்கள் நண்பர்கள் சிலருக்கு முககவசங்கள் இல்லை அவர்களுக்கு முககவசம் கொடுப்பதற்கு பதிலாக அவர்களை கேவலப்படுத்திய சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.
- மேற்குவங்காள மாநிலத்தில் தேர்தல் பரப்புரைகளில் ஆயிரக்கணக்கான நபர்கள் கூடுகின்றனர். இதுபோன்ற பொது நிகழ்வுகள் இனிவரும் காலங்களில் நோய்தொற்று சூழலில் அனுமதிக்கப்படக் கூடாது இது மிகவும் ஆபத்தானதாகும். தேர்தல் பரப்புரைகளுக்கு புதிய முறைகள் உதாரணமாக செல்பேசிகளை பயன்படுத்தலாம் இது அதிக மக்கள் கூடுவதை தடுக்கும்.
- பெருந்தொற்று சூழலில் எங்களின் கல்வி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது இணையவழிக்கல்வி மிகக் கடினமான உள்ளது எங்களில் பலருக்கு ஸ்மாட்போன் வசதி இல்லை ஒரு வேலை ஏதாவது ஒரு ஸ்மார்ட்போனை ஏற்பாடு செய்தால் கூட இண்டர்நெட் வசதி இருப்பதில்லை. கல்விக்காக இண்டர்நெட் வசதி பெறுவதற்கு எங்களுக்கு அரசு மானியத்தொகை வழங்க வேண்டும். இதற்கு மாற்றாக கல்வி பெட்டகங்களை எங்களுக்கு அளித்து எளிய கற்றலுக்கு வழிவகுக்கலாம். மேலும் நாங்கள் வாழும் சமூகத்தில் சிறு குழுக்களில் நாங்கள் கல்வி கற்க ஏற்பாடு செய்தால் அடுத்த வகுப்பினை அடிப்படைகளை நாங்கள் கற்றுக் கொள்ள முடியும்.
- குழந்தைகள் எந்த அறிவும், திறனும் பெறமாலே வகுப்புகளில் தேர்ச்சி பெற்றுவிட்டதாக இரண்டு ஆண்டுகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது உயர்கல்வி பெறுவதற்கும் அல்லது வேலை வாய்ப்புகளை பெறுவதற்கும் எங்களை தகுதி அற்றவர்களாக மாற்றியுள்ளது. இதற்கு பதிலாக இந்த பெருந்தொற்று மாணவர்களுக்கு கல்வி இடைவேளை ஆண்டாக அறிவித்துவிட்டு எங்களுக்கு சில திறன்களை மட்டும் கற்பிக்க முயற்சி எடுக்கலாம். பெருந்தொற்று காலத்திற்கு பின் அதே கல்வியாண்டில் நாங்கள் மீண்டும் பயில்வதற்கும் முறையான கற்பித்தல் கற்றலை பெறுவதற்கும் வழிவகை செய்யலாம்.
- தற்போது நிலவிவரும் ஊரடங்கினால் நாங்களோ எங்கள் குடும்பத்தினரோ வேலைக்கு செல்ல இயலாததால் எங்களால் வீட்டு வாடகை செலுத்த முடியவில்லை. இந்த பெருந்தொற்று முடிவுக்கு வரும் வரை வாடகை கொடுப்பதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். அப்போதுதான் நாங்கள் தெருவிற்கு வந்துவிடுவோமோ என்ற அச்சமில்லாத நிலையில் நாங்கள் வாழ முடியும்.

**அனைத்து குழந்தைகளின் பாதுகாப்பு:**

- குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினர் அனைவருக்கும் முழுமையான உறுதி செய்யப்பட வேண்டும். இதன் மூலம் நாங்கள் உடல்ரீதியாக மற்றும் மனரீதியாக எந்தவொரு வன்முறைகளிலிருந்தும் மற்றும் துன்புறுத்தல்களிலிருந்தும் முற்றிலும் பாதுகாப்பு பெற முடியும்.

**உழைக்கும் மற்றும் வளரிளம் பருவத்தினரின் கோரிக்கை மனு**
**அரசின் கவனம் கோருதல் மற்றும் குழந்தை உரிமைநேய பதிலை எதிர்பார்த்தல்**
ஏப்ரல்-30-2021 தேசிய உழைக்கும் குழந்தைகள் தினம், இந்தியா.

- எங்களது வேலை எங்களது பின்னணி எங்களது வாழ்க்கை நிலை ஆகியவற்றின் அடிப்படையில் உழைக்கும் குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினராகி நாங்கள் எப்போதும் அபராதம் விதிக்கப்பட்டும் தண்டிக்கப்பட்டும் வருகிறோம். நாங்கள் உயிர் வாழ்வதற்காகவும் எங்கள் குடும்பத்தின் தேவைகளுக்காவுமே வேலை செய்து வருகின்றோம். எங்கள் மீது அபராதங்களை விதிக்கும் சட்டங்கள் செயல்படுத்தப்பட கூடாது.
- எங்களில் குறிப்பிட்ட சிலர் (De-Notified) பழங்குடியினத்தை சேர்ந்தவர்களாவும் தெருவோர குழந்தைகளாகவும் இருக்கிறோம். நாங்கள் காவல்துரையினரின் துன்புறுத்தலுக்கு ஆளாகும் நிலை வெகுவாக உள்ளது. எங்கள்மீது வன்முறைய கட்டவிழ்த்து விடும் மற்றும் எங்கள் பணத்தை பறிமுதல் செய்யும் காவலர்களுக்கு உரிய தண்டனை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இது போன்ற நிலைக்கு ஆளாகும் எல்லா குழந்தைகளுக்கும் முழுமையான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.
- எங்களில் சிலர் தெருவிலேயே வசிக்கும் மற்றும் வேலை செய்யும் நிலையில் இருப்பதால், பலவித தீங்கிழைத்தலுக்கு உள்ளாகின்றனர். இவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.
- குழந்தைகளை விற்கும் மற்றும் அனைத்துவித சுரண்டல்களுக்கு உள்ளாக்கும் நபர்களையும், நிறுவனங்களையும் அரசு அடையாளம் காண வேண்டும். இதுபோன்ற நிறுவனங்களுக்கு எங்களை அனுப்பி ‘‘பாதுகாப்பாக இருங்கள்’’ என்று சொல்லக் கூடாது.
- குழந்தை உரிமைகளை எவ்வாறு மதிக்க வேண்டும் என்பது குறித்து பள்ளிகளிலும், வர்மும் பகுதிகளிலும் பரந்துபட்ட சமூகத்திலும் விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு ஆவண செய்ய வேண்டும்.

**வளரிளம் பருவத்தினருக்கு பாதுகாப்பான வேலை/தொழில்:**

- வளரிளம் பருவத்தினர் பாதுகாப்பான வேலைகளில் அமர்த்தப்படுவதை சட்டம் அனுமதிக்கிறது. ஒருவேளை நாங்கள் வேலைக்கு செல்வதை தேர்ந்தெடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டால் ஆண், பெண் மற்றும் அனைத்து பாலினருக்கும் பணியிடம் பாதுகாப்பாக இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும்.
- நாங்கள் வேலை பார்க்கும் இடங்களில் அனைத்துவித சுரண்டல்கள் மற்றும் தீங்கிழைத்தல்களிலிருந்து நாங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.
- பட்டாசு, சுரங்கம் மற்றும் மது, போதை பொருட்கள் போன்ற நச்சுப் பொருட்கள் தயாரிக்கும் ஆபத்தான தொழில்களில் வளரிளம் பருவத்தினர் ஈடுபடுத்தப்படுவதை நாங்கள் ஏற்க முடியாது. நீண்ட நேரம் பின்னிரவு வரை வேலை செய்யும் தொழில்களில் அமர்த்தப்பட்டுள்ள வளரிளம் பருவத்தினருக்கான பாதுகாப்பு குறித்த கடுமையான வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட வேண்டும்.

**உழைக்கும் மற்றும் வளரிளம் பருவத்தினரின் கோரிக்கை மனு**
**அரசின் கவனம் கோருதல் மற்றும் குழந்தை உரிமைநேய பதிலை எதிர்பார்த்தல்**
ஏப்ரல்-30-2021 தேசிய உழைக்கும் குழந்தைகள் தினம், இந்தியா.

- பாதுகாப்பான தொழில்களில் வளரிளம் பருவத்தினர் வேலை செய்ய அனுமதிக்கப்பட்ட போதும் அது போன்ற பாதுகாப்பான தொழில்கள் மிகக் குறைவாகவே உள்ளன. எங்களில் பலர் ஆபத்தான வேலைகளில் ஈடுபடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். அரசு வளரிளம் பருவத்தினருக்கு பாதுகாப்பான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் நாங்கள் பாதுகாப்பான வேலைகளில் அமர்த்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.
- முறையான பள்ளிக்கல்வியை பெறாத வளரிளம் பருவத்தினருக்கு பாதுகாப்பான வேலை வாய்ப்புகளை அரசு உறுதி செய்ய வேண்டும். நாங்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளோம்.
- எங்களது தன்னம்பிக்கையும், வளர்ச்சியும் முன்னேற்றத்தையும் உறுதி செய்யும் வேலை வாய்ப்புகள் எங்களுக்கு வழங்கப்பட வேண்டும். தையல், தச்சு மற்றும் மின் இணைப்பு போன்ற தொழில்களுக்கான பயிற்சியும் வேலை வாய்ப்பும் எங்களுக்கு உதவும்.
- தற்போது அனேக வளரிளம் பருவத்தினர் குறிப்பாக பெண் குழந்தைகள் பாதுகாப்பற்ற சூழலில் வேலை பார்த்து வருகின்றனர். முறையான தொழில் கூடங்களில் இல்லாத வேலைகளையும் எங்கள் பாதுகாப்பையும் கண்காணிப்பது கடினம். அதுபோன்ற சூழல்களில் சைல்டுலைன் போன்ற அமைப்புகள் எங்கள் பணியிடங்களை தொடர்ந்து கண்காணித்து மற்றும் ஆய்வு செய்து எங்கள் பாதுகாப்பு அம்சங்களில் உள்ள இடைவெளிகளை கண்டறிந்து உடனடியாக எங்களது பாதுகாப்பை உறுதி செய்ய ஆவண செய்ய வேண்டும். பணியிடங்களில் பெண் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். நாங்கள் மதிக்கப்பட வேண்டும்.
- 16 – 18 வயதிலுள்ள வளரிளம் பருவத்தினருக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உத்தரவாக சட்டத்தின் கீழ் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். உதாரணமாக எங்களது வயது மற்றும் திறனுக்கு ஏற்ற வகையில் நாங்கள் காய்கறிகளை வளர்ப்பது மற்றும் விவசாயத்தில் ஈடுபடுவது போன்ற பணிகளை செய்ய முடியும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உத்தரவாக திட்டம் கிராம அளவில் பஞ்சாயத்துகள் சமூக உறுப்பினர்களின் கண்காணிப்பின் கீழ் செயல்படுத்தப்படுகின்றது. இதன்மூலம் எங்களது பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியும். மேலும் இது பள்ளி இடை விலகிய எங்களில் பலருக்கு சம்பாதித்துக் கொண்டே படிப்பை தொடர உதவும்.
- மாதாந்திர தவணைக்கு கடன் பெறும் வசதிகளை எங்களுக்கு அரசு வழங்க வேண்டும். இதன்மூலம் எங்களது பணத்தை நாங்கள் சிறப்பாக நிர்வகிக்க முடியும். வங்கி கணக்கு துவங்குதல் மற்றும் நிதி மேலாண்மை குறித்து எங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும்.
- எங்களில் சொந்தமாக தொழில் தொடங்க விரும்புவோருக்கு குறைந்த வட்டிக்கு கடனுதவியும் அந்த தொழில்களை சிறப்பாக நடத்த வழிகாட்டுதல்களும் வழங்க அரசு ஆவண செய்ய வேண்டும்.

**உழைக்கும் மற்றும் வளரிளம் பருவத்தினரின் கோரிக்கை மனு**
**அரசின் கவனம் கோருதல் மற்றும் குழந்தை உரிமைநேய பதிலை எதிர்பார்த்தல்**
ஏப்ரல்-30-2021 தேசிய உழைக்கும் குழந்தைகள் தினம், இந்தியா.

- எங்களது திறனுக்கு ஏற்ற வகையில் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். உதாரணமாக வாகனங்கள் பழுது பார்ப்பதில் எங்களுக்கு அடிப்படைத் திறன் இருந்தால் அத்துறையிலேயே பயிற்சியும் வேலையும் கிடைத்தால் நாங்கள் எங்கள் திறன்களை மேம்படுத்திக் கொள்ளவும் நல்ல வருமானம் ஈட்டவும் முடியும்.
- நாங்கள் வேலை பார்க்கும் இடங்களில் போதிய கழிப்பிட வசதி இருக்க வேண்டும். நாங்கள் கழிப்பறைக்கு செல்லும் போது எங்களை திட்டக் கூடாது.
- நீண்ட நேரம் வேலை பார்க்கும் சூழல் ஏற்பட்டால் எங்களுக்கு போக்குவரத்து வசதி செய்து தரப்பட வேண்டும். எங்களது வேலை நேரம் முறைப்படுத்தப்பட வேண்டும். முறைப்படுத்தப்பட்ட வேலை நேரத்திற்கு மேல் வேலை செய்யும் சூழல் ஏற்பட்டால் அதற்குரிய ஈட்டு தொகை வழங்கப்பட வேண்டும்.
- எங்களது பணியிடத்தில் குறித்த நேரங்களில் உணவு வழங்கப்பட வேண்டும்.
- எங்களது வேலைக்கான உரிய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் இதன்மூலம் எங்கள் பணித்திறன் மேம்படும்.
- எங்களது முதலாளிகள் ஒருபோதும் எங்களை மிரட்ட கூடாது. பணியில் நாங்கள் தவறுகள் ஏதெனும் செய்தால் எங்களை திட்டாமல் தவறுகளை திருத்தி கொள்ள உதவ வேண்டும். அரசங்கமும் எங்களோடு பணி செய்யும் தன்னார்வ அமைப்புகளும் வளரிளம் பருவத்தினருக்கு பாதுகாப்பான பணி என்பது குறித்து உருவாக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை முதலாளிகள் முறையாக கடைப்பிடிக்கின்றார்களா என்பதை உறுதி செய்ய வேண்டும்.
- ஊதியம் வழங்குவதில் பாலின பாகுபாடு கூடாது ஆண் குழந்தைகளை விட பெண் குழந்தைகளுக்கு குறைவான ஊதியம் வழங்கப்படுகிறது. எல்லா வளரிளம் பருவத்தினருக்கும் சமமான ஊதியம் வழங்கப்பட வேண்டும். பெரியவர்களுக்கு இணையான வேலையை நாங்கள் செய்யும் போது பெரியவர்களுக்கு வழங்கும் ஊதியமே எங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

**தொழில் பயிற்சி மற்றும் கல்வி:**

- தையல்கலை, அழகுகலை மற்றும் வீட்டில் சிறுபொருட்கள் உற்பத்தி போன்றவற்றில் வளரிளம் பருவத்தினருக்கு பணியுடன் கூடிய தொழில் பயிற்சி வாய்ப்புகளை அரசு வழங்க வேண்டும். இதன் மூலம் நாங்கள் சுயதொழில் தொடங்கவும் அதன்மூலம் எங்களுக்கான வாழ்வாதாரத்தை ஈட்டவும் எங்கள் குடும்பத்தை ஆதரிக்கவும் முடியும்.
- தற்போது முறைசார் தொழில் பயிற்சிகளே அதிகம் உள்ளன ஆனால் இவை ஒருபோதும் பொருளாதார மேம்பாட்டிற்கு போதிய அளவிற்கு பங்களிப்பதில்லை. முறைசாரா தொழில் பயிற்சிகளுக்கு வாய்ப்புகள் விரிவுபடுத்தப்பட வேண்டும்.
- கடினமான சூழல்களில் வாழும் சமூகங்களை சேர்ந்த வளரிளம் பருவத்தினருக்கு இலவசமாக தொழில்பயிற்சி வழங்குவதற்காக தொழிற்கூடங்கள் அரசால் நிறுவப்பட

வேண்டும். பத்தாம் வகுப்பிற்கு பின் தொழிற்பயிற்சிக்கான வாய்ப்புகள் எங்களுக்கு வழங்கப்பட வேண்டும். பயிற்சியின் போது எங்களது வாழ்வாதாரத்திற்காக உதவி தொகை, மானியம் மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்பட வேண்டும்.

- பாலின் பேதங்களை நிலைநிறுத்தும் வகையில் பயிற்சி வாய்ப்புகள் வடிவமைக்கப்படகூடாது. எல்லா பாலினத்தை சேர்ந்த வளரிளம் பருவத்தினருக்கும் அவர்களின் ஆர்வம், ஆசைகள் மற்றும் திறன்களின் அடிப்படையில் தொழிற்பயிற்சிகான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். தேசிய திறந்தவெளி பள்ளிக்கல்வி நிறுவனம் தொழிற்பயிற்சிகளை வழங்குகின்றது. ஆனால் அதற்கான கட்டணம் நாங்கள் செலுத்த முடியாத அளவிற்கு உள்ளது. வருமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களை சேர்ந்த குழந்தைகளுக்கு கட்டணங்கள் குறைக்கப்பட வேண்டும். சமூகநலத்துறை மூலமாக பட்டியலின குழந்தைகளுக்கு தொழிற்கல்விக்கான உதவி தொகை வழங்கப்பட வேண்டும். மேலும் தற்போது உள்ள நடைமுறையில் தேசிய சிறந்தவெளி பள்ளிகல்வி நிறுவனத்தில் தொழில்கல்விக்கான தேர்வுகள் ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் மட்டுமே நடத்தப்படுகின்றது இந்த நடைமுறை இந்த இரண்டு மொழி தெரியாத எங்களில் பலரை வெளித்தள்ளுகிறது. எனவே தேசிய திறந்தவெளி பள்ளிகல்வி நிறுவனம் மாநிலமொழிகளில் பாடநூல்களை வெளியிடுவதுடன் மாநில மொழிகளிலே தேர்வுகள் நடத்த வழிவகை செய்ய வேண்டும்.
- எங்களில் சில குழந்தைகள் குறிப்பாக பெண் குழந்தைகள் பள்ளியிலேயே தொழிற்கல்வி பெற விருப்பம் தெரிவித்துள்ளனர். இக்குழந்தைகளின் குடும்பங்கள் இவர்களை பள்ளிக்கு வெளியே தொழிற்கல்வி பெற அனுமதிப்பதில்லை என்றும் தெரிவித்தனர்.
- எங்களில் ஒருசிலா் தொழிற்கல்வி கற்றுக்கொண்டே பள்ளி தேர்வுகளை எழுத வேண்டிய நிலை ஏற்பட்டால் எங்களுக்கு ஆதரவும் கூடுதல் வகுப்புகளும் வழிகாட்டுதல்களும் வழங்கப்பட வேண்டும்.

**கல்வி**

- குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தை சேர்ந்த எங்களில் சிலர்
    - ➢ பள்ளிக்கே சென்றதில்லை
    - ➢ கோவிட் - 19 வரும் வரை பள்ளியில் படித்தோம் ஆனால் இப்போது பள்ளிக்கு திரும்ப முடியவில்லை.
    - ➢ வேலை பார்த்து கொண்டே படித்து வருகின்றோம். அதிலும் எங்கள் கல்விக்காகவே வேலை பார்க்கின்றோம்.
    - ➢ தொழிற்கல்வி கற்க விரும்புகின்றோம்.
    - ➢ பாதுகாப்பான வேலையும், வேலை பார்த்து கொண்டே படிப்பதற்கான வாய்ப்பு எதிர்பார்கின்றோம்.
- எங்களில் ஒவ்வொருவருக்கும் தனித்துவமான தேவைகள் இருப்பதால் அரசாங்கம் எங்களின் கல்வி தொடர்பான பிரச்சனைகளுக்கு பொருத்தமான வெவ்வேறு வழிமுறைகளை கையாள

வேண்டும். எங்களது கல்வி மற்றும் தொழிற்கல்விக்கு அப்பாற்பட்டு எங்களுக்கு எங்கள் உரிமைகள் குறித்தும் எங்களது உடல் குறித்தும் எங்களது வாழ்க்கை மற்றும் வாழ்வாதாராம் குறித்தும் தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.

- தரமான கல்வி எங்களுக்கு கிடைத்தால் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு அது மேலும் பல வாய்ப்புகளை கொடுக்கும் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் எங்களுக்கு தரமான கல்வி கிடைப்பதில் பலதடைகள் உள்ளது என்பதையும் நாங்கள் உணர்ந்திருக்கிறோம். இதற்கான காரணகளை கண்டறிந்து சரிசெய்யப்பட வேண்டும். எங்களில் பலர் வேலை பார்த்து கொண்டே படிப்பதை விரும்புகிறோம். அது எங்களுக்கு வாழ்வாதாரத்தையும் அதே சமையம் கல்வி மற்றும் எங்கள் உரிமைகளை கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பையும் ஒரு சேர வழங்கும்.
- புதிய கல்வி கொள்கையில் நல்ல பல ஆலோசனைகள் இருந்த போதிலும் அது ஏழை குழந்தைகளை சிறுவயதிலேயே தொழிற்கல்வியில் அமர்த்தும் நிலையை ஊக்குவிக்கின்றது. வசதி படைத்த குழந்தைகள் மட்டுமே உயர்கல்வி பெற முடியும் என்ற நிலையையும் ஏற்படுத்துகின்றது. இது பாகுபாடு கொண்டதாக உள்ளது தொழிற்கல்வியை கற்பது உயர்கல்வி பெற விரும்பும் எங்களுக்கு தடையாக இருக்கக் கூடாது.
- புலம்பெயர்ந்த சமூகங்கள், ஒரு பெற்றோரை கொண்ட குடும்பங்கள் மற்றும் ஏழைக்குடும்பங்ளை சேர்ந்த குழந்தைகளுக்கு இலவச கல்வியும், கல்வியில் கூடுதல் கவனிப்பும் வழங்கப்பட வேண்டும். கல்வி அடிப்படை உரிமையாக இருப்பதால் எல்லா குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டுமென்று உங்கள் உறுப்பினர்கள் சிலர் வழியுறுத்தினார்கள்.
- அரசு பள்ளிகளில் தரமான கல்வி வழங்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் தங்கள் பணியை உண்மையாக செய்வதற்கு உணர்வூட்டப்பட வேண்டும். 30:1 என்ற மாணவர் ஆசிரியர் விகிதாசாரம் முறையாக கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
- ‘பணம் ஈட்டிக் கொண்டே கற்பது மாலை நேர உயர்நிலைப்பள்ளி, தொலைதூர பள்ளிக்கல்வி, குறுகியகால கல்வி வகுப்புகள்’ மற்றும் இதுபோன்ற நடைமுறைகள் வேலை பார்த்துக் கொண்டே படிக்கவிரும்பும் எங்களை போன்றறோருக்கு மிக முக்கியம். இதன்மூலமாக மட்டுமே எங்களில் சிலர் கல்வியை தொடரமுடியும்.
- நாங்கள் எங்கள் கல்வியை தொடர்வதற்கு ஏற்ற திட்டங்களை அரசு வடிவமைக்க வேண்டும். குறிப்பாக புலம் பெயர்ந்த சமூகங்களை சேர்ந்த குழந்தைகளுக்கு விடுதிவசதி, கல்வி உதவி தொகை, கல்வி கட்டண தள்ளுபடி மற்றும் பள்ளி தொடர்பான பிற செலவினங்களுக்கு உரிய உதவி ஆகியவை வழங்கப்பட வேண்டும்.
- பள்ளிகளில் எங்கள் சமூக பின்னணி குறித்து ஆசிரியர்கள் கேவலமாக பேசுவது முற்றிலும் நிறுத்தபட வேண்டும்.
- பள்ளிகளில் எந்தவித தீங்கிழைத்தல்களோ அல்லது வகுப்பறை தண்டனைகலோ இருக்க கூடாது. எங்களுக்கு மிகச் சிறப்பாக எவ்வாறு உதவ முடியும் மற்றும் கற்று

கொடுப்பவைகளை எவ்வாறு எங்களை புரிந்து கொள்ள செய்ய முடியும் என்பது மட்டுமே ஆசிரியர் கவனத்தில் இருக்க வேண்டும்.

- இணையவழி கற்பித்தல் மற்றும் செல்போன் வழி கற்பித்தல் ஆகியவை எங்களுக்கு பயன்படவில்லை. ஒரு வேலை இணையவழி கல்வி மட்டுமே சிறிது காலத்திற்கு தொடரும் என்ற நிலை இருக்குமானால் எங்களுக்கு எளிமையாக பாடங்களை புரியவைத்தல், இணையவசதி, செல்போன் வசதி சிறந்த இண்டர்நெட் இணைப்பு ஆகியவை உறுதி செய்யப்பட வேண்டும். ஆனால் நீண்டகாலம் இந்தமுறை உதவாது. நாங்கள் வாழும் பகுதிகளுக்கு அருகிலேயே பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட வேண்டும். ஒருவேளை நாங்கள் கல்வி கற்க போதிய உதவி கிடைக்காவிட்டால் எங்களில் அநேகர் பள்ளியில் இருந்து இடைவிலகி வேலையில் சேரும் நிலை ஏற்படும்.
- எங்களது கல்வி மற்றும் தொழில்கல்விக்கான அனைத்து வாய்ப்புகள் குறித்த தகவல்கள் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் எங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

**எங்கள் குடும்பங்கள் மற்றும் இளையோருக்கான வாழ்வாதாரம்:**

- குழந்தைகள் வேலை செய்து பிழைக்கும் நிலைக்கு தள்ளப்படாமல் இருக்க, பெரியவர்களுக்கு குழந்தைகளின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ற போதிய ஊதியத்தை வழங்க கூடிய நிரந்தர வேலைவாய்ப்புகள் பல்வேறு துறைகளில் உருவாக்கப்பட வேண்டும்.
- எங்கள் குடும்பங்களில் கைவினை பொருட்களும், குடிசை தொழிலில் உருவாக்கப்படும் பொருட்களும் தயாரிக்கப்பட்டால் அவற்றை விற்பதற்கு அரசு ஆதரவளிக்க வேண்டும். இது எங்கள் குடும்பங்களுக்கும் நாங்கள் வாழும் சமூகங்களுக்கும் உதவியாக இருக்கும்.
- எங்களில் பலர் வேலைக்கு செல்லும் நிலை ஏற்பட்டதற்கு வருமை ஓர் அடிப்படை காரணமாக உள்ளது. எனவே வருமையை ஒழிப்பதற்கு அரசு பல்வேறு திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இதன் மூலம் எங்களில் கல்வியை தொடர விரும்புவர்களுக்கு அதை சாத்தியமாக்க முடியும்.
- சில குடும்பங்களில் குழந்தைகள் மற்றும் பெற்றோர் ஆகிய அனைவருமே வேலை பார்கின்ற போதும் அவர்கள் ஈட்டும் வருமானம் போதுமானதாக இல்லை. வேலையின்மை மற்றும் குறைந்த கூலி ஆகிய பிரச்சினைகளை அரசு உடனடியாகவும் தொடர்ச்சியாகவும் களைய முற்பட வேண்டும். பெரியவர்களுக்கு நல்ல வேலையும் அவர்களின் குடும்பத்தின் வாழ்வாதாரம் முழுமையாக பேனப்படும்.
- குழந்தைகள் கல்வி அல்லது தொழிற்கல்வியை தொடர்வதற்கு அவர்களின் பெற்றோர்களுக்கு உரிய ஆலோசனை வழங்கப்பட வேண்டும். மேலும் பெற்றோர்கள் குழந்தைகளை வேலைக்கு செல்ல ஊக்குவிக்காமல் இருப்பதற்கு தகுந்த ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும்.

**உழைக்கும் மற்றும் வளரிளம் பருவத்தினரின் கோரிக்கை மனு**
**அரசின் கவனம் கோருதல் மற்றும் குழந்தை உரிமைநேய பதிலை எதிர்பார்த்தல்**
ஏப்ரல்-30-2021 தேசிய உழைக்கும் குழந்தைகள் தினம், இந்தியா.

**அறிவிக்கப்பட்ட (De-Notified) பழங்குடியினத்தை சேர்ந்த குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த கோரிக்கைகள்:**

- காவல்துறையில் எங்கள் குறைகளை கேட்பதற்கென்றே தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டும். சட்டத்தில் முரண்பட்ட குழந்தைகள் என்று குழந்தைகளை கைது செய்ய நேர்ந்தால் காவல்துறையினர் சிறார் நிதி சட்டத்தை மீறி நடக்கக் கூடாது. நாங்கள் குறிப்பிட்ட பழங்குடியின இனத்தை சேர்ந்தவர்கள் என்ற அடிப்படையில் காவலர்கள் எங்களை பாடுபடுத்துவதை முற்றிலும் நிறுத்தப்பட வேண்டும்.
- பர்தீஸ், கஞ்சார்ஸ் மற்றும் பிற குறிப்பிட்ட பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள காவல்நிலையங்களுக்கு எங்களை புரிந்து கொள்வதற்கான சிறப்பு பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
- குறிப்பிட்ட பழங்குடியினத்தை சேர்ந்த மக்களைப் பற்றி நேர்மையான தகவல்கள் பகிரப்படுவதன் மூலம் எங்களது மான்பு பேணப்படும். எங்களைப் பற்றி ஊடகங்களில் காட்டப்படும். தவறான பிம்பத்தை நாங்கள் விரும்பவில்லை. எங்கள் சமூகத்தை சேர்ந்த ஒருசிலர் கைது செய்யப்பட்டால் கூட செய்திதாள்களில் ‘‘கஞ்சார்கும்பல்’’ அல்லது ‘‘பர்திகும்பல்’’ என்று குறிப்பிடுவது எங்கள் மொத்த சமூகத்தின் மீது மிகப் பெரும் தாக்கங்களை உருவாக்குகின்றது. இது அப்பட்டமான பாகுபாடு மற்றும் அவதூறு ஆகும்.
- எங்கள் பெற்றோருக்கு அவரிடம் உள்ள திறனுக்கு ஏற்ற வகையில் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.
- குப்பை பொறுக்கும் எங்கள் சமூகத்தை சேர்ந்தவர்களை சந்தேக கண்னோடு பார்க்கக்கூடாது. அவர்களின் திறனை மேம்படுத்தி நகராட்சி துப்புரவு பணிகளில் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.
- எங்கள் சமூகத்தை சேர்ந்த குழந்தைகளுக்கு DNT என்று குறிப்பிட்டு சாதிசான்றிதழ் வழங்கப்பட வேண்டும். இதன்மூலம் எங்கள் சமூகத்தினருக்கு உரிய அரசு திட்டங்களையும் கல்வி உதவி தொகை போன்றவற்றையும் பெற முடியும்.
- போதிய கல்வி உதவி தொகை வழங்குவதன் மூலம் எங்கள் சமூகத்தினருக்கு கல்வி முக்கியத்துவதுவம் குறித்து புரிய வைப்பதுடன் குழந்தை தொழிலாளர்களாக எங்களை மாற்றுவதை பெரிதும் தடுக்க முடியும்.
- DNT விடுதிகளில் குழந்தைகளின் மீது தற்போது நிகழ்த்தப்படும் தீங்கிழைத்தல்கள் மற்றும் பாகுபாடுகளை களைய DNT துறை மற்றும் கல்வி துறை முறையாக கண்காணிக்க வேண்டும்.
- எங்கள் சமூகத்தினருக்கு நாங்கள் வாழும் பகுதிகளில் நிலப்பட்டாக்களோ தண்ணீர் வசதிகளோ இல்லை எனவே நாங்கள் வாழும் பகுதிகளில் உரிய கட்டமைப்பு வசதிகளை அரசு ஏற்படுத்த வேண்டும்.

**உழைக்கும் மற்றும் வளரிளம் பருவத்தினரின் கோரிக்கை மனு**
**அரசின் கவனம் கோருதல் மற்றும் குழந்தை உரிமைநேய பதிலை எதிர்பார்த்தல்**
ஏப்ரல்-30-2021 தேசிய உழைக்கும் குழந்தைகள் தினம், இந்தியா.

**உடல்நலம்:**

- நாங்கள் வாழும் சமூகங்களில் போதிய மருத்துவ வசதிகள் இருப்பதில்லை. அரசாங்கம் எங்களுக்கு தேவையான மருத்துவ வசதிகளை வழங்க வேண்டும்.
- எங்களது பாதுகாப்பான வேலை சூழலின் ஒரு பகுதியாக மருத்துவக் காப்பீடு எங்களுக்கு வழங்கப்பட வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட இடைவெளியில் மருத்துவ பரிசோதனையும் வழங்கப்பட வேண்டும். இவற்றை அரசு உறுதி செய்ய வேண்டும்.
- நாங்கள் வாழும் சமூகங்களில் கோவிட்-19 நோய் தொற்றால் பாதிக்கப்பட்டோருக்கு இலவச பொது மருத்துவமும் கோவிட்-19 க்கான மருத்துவ சிகிச்சையும் வழங்கப்பட வேண்டும். கோவிட்-19 நோய் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெற முகக்கவசங்களும் கிருமி நாசினிகளும் குழந்தைகளை உள்ளிட்ட அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும்.
- நாங்கள் வாழும் சமூகங்களில் வளரிளம் பருவ பெண் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து, உடல்நலம் மற்றும் மனநல ஆலோசனை உள்ளிட்ட திட்டங்கள் வழங்கப்பட வேண்டும். பருவம் எய்தும் பெண் குழந்தைகளுக்கு அவர்களுக்கு ஏற்படும் உடல் மாற்றங்கள் குறித்தும் அதனால் ஏற்படும் உளவியல் தாக்கங்கள் குறித்தும் உரிய தகவல்களும் ஆலோசனைகளும் வழங்கப்பட வேண்டும். மேலும் மாதவிடாய் சுகாதாரம் குறித்தும் உரிய தகவல்களும் பருவமெய்தும் போது ஏற்படும் மனநல கொந்தளிப்பை சமாளிக்க கூடிய வழிகாட்டுதல்களும் வழங்கப்பட வேண்டும். வளரிளம் பருவ பெண் குழந்தைகளுக்கு சனிடரிநாப்கின்கள் இலவசமாக வழங்கப்பட வேண்டும்.
- எங்களில் சிலருக்கு போதை மறுவாழ்வு போதை பழக்கத்திலிருந்து மீட்பு புகையிலை மற்றும் மதுபழக்கங்களிலிருந்து போன்றவற்றை அடைய ஆதரவு வேண்டும். இதற்கான மருத்துவ சேவைகள் மற்றும் மனநல ஆலோசனைகள் இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

**உணவு பாதுகாப்பு:**

- பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு மதியஉணவு வழங்கப்படுகின்றது. கோவிட் நோய் தொற்று சூழலில் பள்ளி குழந்தைகளுக்கு மதிய உணவிற்கான பொருட்கள் வழங்கப்பட்டது. எங்களை போன்ற வளரிளம் பருவத்து உழைக்கும் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்பட வேண்டும்.
- எங்கள் குடும்பங்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர உணவு பொருட்கள் போதுமானதாக இல்லை இவ்வாறு வழங்கப்படும் பொருட்களின் அளவும் தரமும் உயர்த்தப்பட வேண்டும். மாதாந்திர உணவு பொருட்கள் பெறுவதற்கு Biomatric அடையாளங்கள் கோரப்படுகின்றது. தொழிற்நுட்ப பிரச்சனையின் காரணமாக பல நேரங்களில் Boimatric வேலை செய்வதில்லை. அச்சமையங்களில் எங்களது உடனடி தேவைகருதி மாதாந்திர உணவு பொருட்கள் வழங்கப்பட வேண்டும்.

**உழைக்கும் மற்றும் வளரிளம் பருவத்தினரின் கோரிக்கை மனு**
**அரசின் கவனம் கோருதல் மற்றும் குழந்தை உரிமைநேய பதிலை எதிர்பார்த்தல்**
ஏப்ரல்-30-2021 தேசிய உழைக்கும் குழந்தைகள் தினம், இந்தியா.

- இரத்தசோகை மற்றும் ஊட்டசத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ள வளரிளம் பருவ பெண் குழந்தைகளுக்கு போதிய மருத்துவ சேவையும் ஊட்டச்சத்திற்கான ஈடுசெய் உணவுகளும் அரசால் வழங்கப்பட வேண்டும்.
- அத்தியவசிய பொருட்களின் விலையேற்றத்தை அரசு கட்டுப்படுத்த வேண்டும்.
- கோவிட்-19 பெருந்தொற்றால் எங்களில் பலர் சொந்த ஊருக்கு திரும்பும் நிலையில் உள்ள எங்களுக்கு அரசு உதவி தொகையும் கூடுதல் உணவு பொருட்களும் வழங்கினால் எங்கள் குடும்பங்களுக்கு நாங்கள் சுமையாக இருக்கும் நிலை ஏற்படாது.

**எதிர்மறையான சமூக பழக்கங்கள்:**

- எங்கள் சமூககங்களில் சட்டத்திற்கு புறம்பான மதுவிற்பனை தடுக்கப்பட வேண்டும். இதுவே பெண்கள் மீதான வன்முறை குழந்தைகள் மீதான வன்முறை சமூகத்தில் அதிக மதுபழக்கம் பெண்களும் குழந்தைகளும் மதுபழக்கத்திற்கு ஆளாகுதல் போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு காரணமாகின்றது.
- உழைக்கும் குழந்தைகள், வளரிளம் பருவத்தினா் மற்றும் தெருவோர குழந்தைகள் பெருமளவில் போதை பழக்கங்களுக்கு ஆளாவதை தடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- சட்டப்படியான திருமணவயதில் திருமணம் செய்வதை இளையோரிடம் ஊக்குவிப்பதற்காக அரசு உருவாக்கியுள்ள திட்டங்களை எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்த வேண்டும். இது புது மணதம்பதிகளுக்கு பண பரிசினை தருவதுடன் 18 வயதிற்கு கீழுள்ள பெண் குழந்தைகளுக்கு திருமணம் செய்வதை குறைப்பதற்கும் வழிவகுக்கும் இதுகுறித்து போதிய விழிப்புணர்வை உள்ளாட்சி அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும்.

**ஆளுகை:**

- குழந்தைகளும் வளரிளம் பருவத்தினரும் இந்நாட்டின் இன்றைய “இளையக்குடி மக்கள்” என்று அங்கீகரிக்கப்பட வேண்டும்.
- சட்டங்களை மாற்றுவதில் அரசு கவனம் கொள்வதுடன் குழந்தைகளின் கடினமான சூழல்களை மாற்றுவதில் அதிக கவனமும் அக்கறையும் கொள்ள வேண்டும்.
- எங்களது பிரச்சனைகளை வெளிக்கொணா்வதற்கு பல்வேறு ஊடகங்களை நாங்கள் பயன்படுத்துவதை அரசு ஊக்குவிக்க வேண்டும்.

**உழைக்கும் மற்றும் வளரிளம் பருவத்தினரின் கோரிக்கை மனு**
**அரசின் கவனம் கோருதல் மற்றும் குழந்தை உரிமைநேய பதிலை எதிர்பார்த்தல்**
ஏப்ரல்-30-2021 தேசிய உழைக்கும் குழந்தைகள் தினம், இந்தியா.

**Signatories:**

| Name of the working children's/ adolescent's union | Represented by | Facilitating organisation | Jurisdiction, State | Adult Facilitator + Contact Details |
|---|---|---|---|---|
| Women's Welfare Association | Arti Meghwal | Mahila Jan Adhikar Samithi (MJAS) | Ajmer, Rajasthan | Karuna Philip<br>8890870412 |
| Tarun Sena | Asmita | Shaishav | Bhavnagar, Gujarat | Parul Sheth<br>9725030123 |
| Bhima Sangha | Deepa, Fathimabi and Sudha | The Concerned for Working Children (CWC) | Bellary, Karnataka | Kavita Ratna<br>9448990480 |
| Vidiyal Child Rights Movement | Rohit Sakthi | Sakthi – Vidiyal | Madurai, Tamil Nadu | Dr. Jim Jesudoss<br>9443335630 |
| Azad Jugnu Club | Mahfouz along with Arin, Suman, Manjna, Shruti and Kuldeesh | Muskaan | Bhopal, Madhya Pradesh | Shivani<br>9425600382 |
| Praajak's Youth Collective | Pritam Mondal | Praajak | Murshidabad, West Bengal | Bidisha Ray Chaudhry<br>9874337456 |
| Balak Nama | Kishan | Childhood Enhancement Through Training and Action (CHETNA) | New Delhi | Iram Naz<br>9711670156 |
| Bal Adhikar Sangharsh Sanghatan (BASS) | Prathmesh Kale | Youth for Unity and Voluntary Action (YUVA) | Mumbai, Maharashtra | Alicia Tauro<br>9892459833 |